DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 20/2023 |
| Deposition of witness | : | PW - 5 |
| Name | : | சதாம் உசேன் |
| Father's /Husband Name | : | கமால் நாசர் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 34 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day August, 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.07.2022-ம் தேதி அதிகாலை 04.46 மணிக்கு திருவாரூர் அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவில் நான் பணியில் இருந்த போது பணி மருத்துவரால் சுமார் 54 வயது மதிக்கத்தக்க அன்சாரி என்பவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக எலும்பு முறிவு சிகிச்சை பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டவரை நான் பரிசோதித்போது அவரது இடது காலில் மூட்டுக்கு கீழ் இரண்டு எலும்புகளும் முறிவு ஏற்பட்டு காணப்பட்டது. அவருக்கு சிகிச்சையளிக்க வேண்டி Xray எடுத்து பார்த்து அதை உறுதி செய்து அவருக்கு உரிய சிகிச்சையளித்து அவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன். அவரை சிகிச்சையிலிருந்து 08.08.2022-ம் தேதி மதியம் 02.00 மணிக்கு சிகிச்சையிலிருந்து விடுவித்தேன். மேற்படி அன்சாரி என்பவருக்கு நான் வழங்கிய காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பேருந்தில் ஒரு நபர் பயணித்து அந்த பேருந்து வேகத்தடையில் ஏறி இறங்கும்போது இடறி விழுந்தாலும் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.